بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡم   نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡكَرِيۡم   وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡد

## பத்ர் போரில் கலந்து கொண்ட மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

## இந்தோனேஷியாவைச் சார்ந்த வாழ்க்கையை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய முபல்லிக் சயூத்தி அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 30 நவம்பர் 2018 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களில் முதலாவது சஹாபி ஹஸ்ரத் சாபித் பின் காலித் அன்ஸாரி ஆவார்கள். பத்ர் போரிலும், உஹது போரிலுல் பங்கு பெற்றார்கள். மற்றும் யமாமாக போரிலும் பங்கு பெற்றார்கள். மேலும் அந்த போரில் அன்னார் ஷஹீதானார்கள்.

பிறகு அப்துல்லாஹ் பின் உர்ஃபதா ஆவார்கள். அன்னார் ஜஃபர் பின் அபூதாலிபுடன் அபிஸீனியா ஹிஜ்ரத்தில் பங்கு பெற்றார்கள். பத்ர் போரில் பங்கு பெற்றார்கள்.

அடுத்து உத்பா பின் அப்துல்லாஹ் ஆவார்கள். அன்னார் பைஅத்தே உக்பாவிலும், பத்ர், உஹது போரிலும் கலந்து கொண்டார்கள்.

பிறகு கைஸ் பின் அபீ ஸஃஸா அன்ஸாரி ஆவார்கள். இவர்கள் 70 அன்ஸார்களுடன் பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். மேலும் அன்னார் பத்ர், உஹது போரில் பங்கு பெறுவதற்கான நற்பேற்றை பெற்றார்கள்.

பத்ர் போருக்காக சென்ற போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது படையுடன் மதீனாவிற்கு வெளியில் புயூத்துஸ் சுக்யா என்ற இடத்தில் தங்கினார்கள். மேலும் சிறிய வயதுடைய குழந்தைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் வந்திருந்தனர். அவர்கள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். சுக்யாவிலிருந்து திரும்பிபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கைஸ் பின் அபீ ஸாஸா அவர்களிடம் முஸ்லிம்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு கூறுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் கைஸ் அவர்கள் கணக்கிட்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்களிடம், இவர்களது எண்ணிக்கை 313 ஆகும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இதனால் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் கூறினார்கள்: தாலூத்தின் தோழர்களின் எண்ணிக்கையும் இதுவே ஆகும்.

அவ்வாறே பத்ர் போரின் நாளின் பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்காக செல்லக்கூடியவர்களுக்கு பின்னால் செல்கின்ற பாதுகாப்புப் படையை வழிநடத்தக்கூடிய பொறுப்பை அன்னாரிடம் ஒப்படைத்திருந்தார்கள்.

ஒரு முறை அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், நான் எவ்வளவு விரைவாக திருக்குர்ஆனை ஓதி முடிக்கட்டும் என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் 15 இரவுகளில் என்று கூறினார்கள். ஹஸ்ரத் கைஸ் அவர்கள், இதை விட விரைவில் ஓதி முடிப்பதற்கான ஆற்றலை பெற்றுள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு ஜுமுஆவிலிருந்து இன்னொரு ஜுமுஆவிற்குள் ஓதி முடியுங்கள் என்று கூறினார்கள். அதற்கு கைஸ் அவர்கள், நான் இதை விட விரைவாக ஓதி முடிக்க ஆற்றலை பெற்றுள்ளேன்என்று கூறினார்கள். அன்னார் இவ்வாறே ஒரு நீண்ட காலமாக திருக்குர்ஆனை ஓதி வந்துள்ளார்கள். எதுவரையென்றால், அன்னார் முதுயவரான நிலையில் கண்களில் துணியை கட்டிய நிலையிலும் 15 நாளில் திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடித்தார்கள். அப்போது அன்னார், நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய கால அவகாசத்தை ஏற்றிருக்க வேண்டுமே என்று கூறினார்கள்.

பிறகு உபைதா பின் ஹாரிஸ் ஒரு சஹாபி ஆவார். பெருமானார் (ஸல்) அவர்களது நெருங்கிய உறவினர் ஆவார்கள். ஆரம்ப நாட்களில் ஈமான் கொண்டவர்களைச் சார்ந்தவர்களாவார்கள். ஹஸ்ரத் உபைதா அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் மிகுந்த கண்ணியத்தை பெற்றிருந்தார்கள். மேலும் அன்னார் பனூ அப்தே மனாஃபின் தலைவர்களில் ஒருவர் ஆவார்கள். ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் தனது இரு சகோதர்களான ஹஸ்ரத் துஃபல் பின் ஹாரிஸ் மற்றும் ஹுஸைன் பின் ஹாரிஸ் ஆகியோருடன் மதீனாவை நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மற்றும் உமைர் பின் அல் ஹுவாம் ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இவர்கள் இருவரும் பத்ர் போரில் ஷஹீதானார்கள்.

ஹிஜ்ரத்திற்கு 8 மாதத்திற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களை 60 அல்லது 80 சவாரிகளுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸிற்காக வெள்ளை நிறத்தினால் ஆன ஒரு கொடிடை கட்டினார்கள். அதை ஹஸ்ரத் மிஸ்தா பின் உஸாஸா அவர்கள் தூக்கிப் பிடித்தார்கள். இந்த படை அனுப்பப்பட்டதன் நோக்கம் என்னவென்றால், குறைஷிகளின் வியாபாரக் குழுவை தடுத்து நிறுத்த வேண்டும் என்பதாகும். குறைஷி படையின் அமீர் அபூ சுஃப்யான் ஆவான். இந்த படையில் 200 நபர்கள் இருந்தனர். சஹாபாக்களின் இந்த ஜமாஅத் ராபிக் பள்ளத்தாக்கில் அந்த குழுவை தடுத்து நிறுத்தினார்கள். இரண்டு படையினருக்கும் இடையே அம்புகளினால் மட்டுமே சண்டை நடந்தது. வேறு எதனைக் கொண்டும் சண்டை நடக்கவில்லை. மேலும் போருக்கான வரிசையும் ஏற்படுத்தப்படவில்லை. முஸ்லிம்கள் தரப்பிலிருந்து அம்பை எய்திய முதல் சஹாபி சஅது பின் அபீ வக்காஸ் ஆவார்கள். இந்த அம்புதான் இஸ்லாம் தரப்பிலிருந்துந்து எறியப்பட்டதாகும்.

அவர்கள் பத்ர் போர் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வலீத் பின் உத்பாபை எதிர்த்து தாக்கினார்கள். நபிமொழியில் வருகின்றது. திருக்குர்ஆனின் வசனமும் இந்த சந்தர்ப்பத்தைக் குறித்து இறங்கியது. ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள். هَٰذَانِ خَصْمَانِ اخْتَصَمُوا فِي رَبِّهِمْ என்ற வசனம் பத்ர் நாளில் போரிட்டவர்கள் தொடர்பாக இறங்கியது. அதாவது ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப், ஹஸ்ரத் அலி பின் தாலிப், ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மற்றும் உதைபா பின் ரபீஆ, ஷஃபா பின் ரபீஆ மற்றும் வலீத் பின் உத்பா போன்றவர்களைக் குறித்து அது இறங்கியது. எவ்வாறிருப்பினும் அபூதாவூதில் இந்த தாக்குதல் குறித்த முழுமையான விவரம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உத்பா பின் ரபீஆ மற்றும் அவருக்குப் பின்னால் அவரது மகன் மற்றும் சகோதரர்களும் வெளியேறினர். மேலும் உரத்த குரலில், யார் எங்களுடன் போரிடுவதற்காக வருவார் என்று கூறினர். அப்போது அன்ஸாரைச் சார்ந்த பல இளைஞர்கள் அதற்கு பதிலளித்தார்கள். நீங்கள் யார் என்று உத்பா கேட்டார். அதற்கு நாங்கள் அன்ஸார்கள் ஆவோம் என்று அவர்கள் பதிலளித்தனர். உத்பா அவர்களிடம், உங்களுடன் எனக்கு எந்தவொரு தொடர்பும் கிடையாது. நாங்கள் எங்களது சச்சாவின் மகனோடு சண்டையிடுவதற்கான எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஹம்ஸாவே! எழுங்கள். அலியே! எழுந்து நில்லுங்கள். உத்பா பின் ஹாரிஸே! முன்னேறிச் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்களது குரலைக் கேட்டதுமே ஹஸ்ரத் ஹம்ஸா அவர்கள் உத்பாவின் பக்கமும், நான் ஷஃபாவின் பக்கமும் மற்றும் உபைதா பின் ஹாரிஸிற்கும் வலீதிற்கும் இடையே சண்டை ஏற்பட்டது. மேலும் ஒருவர் மற்றொருவருக்கு கடுமையான காயத்தை ஏற்படுத்தினோம். பிறகு நாங்கள் வலீதின் பக்கம் கவனம் செலுத்தியவாறு அவரைக் கொன்றோம். மேலும் உத்பாவை போர் களத்திலிருந்து தூக்கிக் கொண்டு வந்தோம். போர் சந்தர்ப்பத்தில் உத்பா ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் அவர்களை காயப்படுத்தி இருந்தான். எனவே பத்ர் மைதானத்திற்கு அருகில் இருக்கின்ற ஸஃப்ரா என்ற இடத்தில் அன்னார் மரணமடைந்தார்கள். மேலும் அங்கேயே அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. உபைதா அவர்களின் முழங்கால் வெட்டப்பட்டிருந்த இடத்திலிருந்து அதிகமான இரத்தம் வெளிவந்து கொண்டிருந்தது. அப்போது சஹாபாக்கள் ஹஸ்ரத் உபைதா அவர்களை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தார்கள். அப்போது அன்னார், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாள் ஷஹீது இல்லையா? என்று கேட்டார்கள்.அ தற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஏனில்லை நீங்கள் ஷஹீதாவீர்கள் என்று கூறினார்கள்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உபைதா பின் ஹாஸிர் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வரப்பட்டபோது தமது மடியில் அன்னாரின் தலையை வைத்தார்கள். பிறகு உபைதா அவர்கள் கூறினார்கள். அந்தோ! இன்று அபூதாலிப் உயிருடன் இருந்திருந்தால் இதனை நன்கு அறிந்திருப்பார். அவர்கள் பெரும்பாலும் இவ்வாறு கூறி வந்தார்கள். இதற்கு அவர்களை விட அதிகமாக நான் உரிமையுள்ளவனாக இருக்கின்றேன். மேலும் முஹம்மதை நாங்கள் உங்களிடம் ஒப்படைத்து விடுவோம் என்பது பொய்யாகும். மேலும் நாங்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருப்பதிலிருந்து வெருண்டோடுவதுடன், எங்கள் மனைவி மக்கள் தொடர்பாகவும் கவனமற்றவர்களாக ஆகும் நிலையில்தான் அது சாத்தியாகும் என்று அன்னார் கூறி வந்தார்கள்.

இதுதான் அந்த மக்களின் உணர்வாகும். ஷஹாதத் பதவியை அடைந்தபோது உபைதா பின் ஹாரிஸ் அவர்களது வயது 63 ஆகும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த சஹாபாக்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறிய பிறகு நான் இந்தேனேஷியாவைச் சார்ந்த வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு முபல்லிக்கைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்களது பெயர் சுயூத்தி அஸீஸ் அஹ்மது ஆகும். நவம்பர் 19 அன்று அன்னாரது மரணம் நிகழ்ந்தது. انالله وانااليه راجعون

அவர்களது குடும்பத்தில் அவர்களது மனைவி, இரண்டு மகன்கள், மகள்கள் மற்றும் பத்து பேரக் குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களில் ஆறு பேர் வக்ஃபே நவ் ஆவார்கள்.

சுயூத்தி அஸீஸ் அஹ்மது சாஹிப் அவர்கள் 17 ஆகஸ்ட் 1944 ல் போனேஜுனூபிஸோலாவேஸியில் பிறந்தார்கள். அவர்கள் செப்டம்பர் 1966 லிருந்து அக்டோபர் 1971 வரை ரப்வாவிலுள்ள ஜாமிஆவில் கல்வி பயின்றார்கள். ஏப்ரல் 1972 ல் மேலிட முபல்லிக்காக இந்தோனேஷியாவில் பணியமர்த்தப்பட்டார்கள். 2000–ஆம் ஆண்டு அவர்களுக்கு ஹஜ் செய்வதற்கான நற்பாக்கியம் கிடைத்தது. 1972 முதல் 1979 வரை ஜுனூபி ஸமாட்ராவிலும், லாம்பூன்ங், ஜாம்பி மற்றும் கேன்க்கூலோவிலும் முபல்லிக்காக தொண்டாற்றியுள்ளார்கள். 1979 முதல் 1981 வரை முஅல்லிமீன்களுக்கு ஆசிரியராக தொண்டாற்றக்கூடிய நற்பாக்கியம் கிடைத்தது. 1981 ல் பூர்போகேத்தூவில் முபல்லிக்காக பணியமர்த்தப்பட்டார்கள். 82–ல் முஅல்லிம் மற்றும் முபல்லிக்களின் வகுப்புகளில் துணை Director ஆக பணியமர்த்தப்பட்டார்கள். 82 முதல் 92 வரை இந்தோனேஷியாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் Principal இருந்தார்கள். 1992 முதல் 2016 வரை ஏறக்குறைய 20 வருடங்கள் தப்லீக் களத்தில் இருந்துள்ளார்கள். 2016 முதல் வஃபாத் வரை இந்தோனேஷியாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் Principal தொண்டாற்றக்கூடிய நற்பேற்றை பெற்றார்கள்.

அன்னார் தனது குடும்பத்தில் அஹ்மதிய்யத் எவ்வாறு வந்தது என்பது தொடர்பாக M.T.A வில் ஒரு நேர்காணல் கொடுத்துள்ளார்கள். அதில் அவர்கள் கூறுகின்றார்கள்: நானும் எனது குடும்பமும் பைஅத் செய்வதற்கான மிக முக்கிய காரணம் என்னவென்றால், இறுதி காலத்தில் இமாம் மஹ்தி வருவார் என்றும் அவர் வந்தார் நீங்கள் அனைவரும் அவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் எனது பாட்டனார் வஸிய்யத் செய்திருந்தார்கள். இந்த வஸிய்யத்தை முழுமை செய்வதற்காக எங்களது குடும்பம் இரண்டு முறை ஹிஜ்ரத் செய்தது. 1959 ல் எங்களது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் லாம்பன்ங்கிற்கு ஹிஜ்ரத் செய்தனர். 1963 ல் மவ்லானா ஸீனி தஹ்லான் சாஹிப் தப்லீக்கிற்காக லாம்பன்ங் வந்திருந்தார்கள். நாங்கள் அவர்களை சந்தித்தோம். அவர்கள் இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: சுயூத்தி அஸீஸ் சாஹிப் கூறுகின்றார்கள்: ரப்வாவில் நாங்கள் தங்கியிருந்தபோது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பல சஹாபாக்களை சந்தித்துள்ளோம்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களுடனான மகிழ்ச்சிகரமான சந்திப்பு தொடர்பாக கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முதல் முறையாக நாங்கள் அன்னாரை சந்தித்தோம். ஹுஸூர் அவர்களிடம் கட்டித் தழுவினோம்.

ஹுஸூர் அவர்கள் எங்களது கண்ணங்களில் தட்டிக் கொடுத்தவாறு, இவர்கள் இந்தோனேஷியாவிலிருந்து வந்துள்ளனர். நீங்கள் அனைவரும் தொலைவிலிருந்து வந்துள்ளீர்கள். நீங்கள் அனைவரும் எனது குழந்தைகளாவீர்கள் என்று கூறினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் ஆன்மீக ஒளி எப்போதும் எங்களுடன் இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக எங்களது அனைத்து கஷ்டங்களும் எளிதாகிவிட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் இந்தோனேஷியா திரும்பி செல்வதற்கு முன்பாக ஹுஸூர் அவர்களை சந்திக்கச் சென்றேன். மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு நான் எனக்கு சில புத்தங்கள் வேண்டும் என்று கூறினேன். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தனது பேனாவினால் ஒரு குறிப்பு எழுதினார்கள். அதில் சுயூத்தி அவர்களுக்கு புத்தகங்களைக் கொடுக்கவும் என்று எழுதினார்கள். இதற்குப் பிறகு எனக்கு ரூஹானீ கஸாயினின் முழு தொகுப்பும் வழங்கப்பட்டது. அது இப்போது வரை என்னிடம் இருக்கின்றது. செல்வதற்கு முன்பாக ஹுஸூர் அவர்கள் நீண்ட நேரம் வரை என்னைக் கட்டித் தழுவினார்கள். மேலும் எனது காதில், தமது எஜமானரிடம் நன்றிகேடு காட்டாதீர்கள். இதுவே எனது அறிவுரையாகும் என்று கூறினார்கள்.

இந்தோனேஷியாவின் அமீர் அப்துல் பாஸித் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னார் எளிமையான நபராவார். பணிவிலும், தன்னடக்கத்திலும் உயர்ந்த முன்மாதிரியாவார். எந்நிலையிலும் பொறுமையை மேற்கொள்ளக்கூடியவர்; துஆ செய்யும் பழக்கமுடையவர்; தஹஜ்ஜுத் தொழக் கூடியவர்; அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருப்பவர் ஆவார்கள். மேலும் கிலாஃபத் அமைப்புடனும், அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்களுடனும் கலப்பற்ற மற்றும் தூய்மையான அன்பை வைத்திருந்தார்கள். தமது சொந்த பணிகளை விட ஜமாஅத் பணிகளுக்கே அதிக முக்கியத்தும் கொடுத்து வந்தார்கள்.

அன்னாரது ஒரு மகள் மர்தியா சாஹிபா எழுதுகின்றார்கள்: எனது தந்தை தனது முழு வாழ்க்கையையும் ஜமாஅத்திற்காக அர்ப்பணித்திருந்தார்கள். மேலும் எனது தந்தையின் வழிமுறை என்னவென்றால், அவர்கள் அதிகமாக போதனை செய்ய மாட்டார்கள். மாறாக, தனது நடைமுறையின் மூலமாக தனது முன்மாதிரியை வெளிப்படுத்தி வந்தார்கள்.

அன்னாரது மகள் அத்யத்துல் அலீம் கூறுகின்றார்கள்: எங்களது தந்தை எப்போதும் உண்மையை பேசி வந்தார்கள். தமது குழந்தைகளிடம் ஒருபோதும் பொய் பேசியது கிடையாது. கேலிக்கையாக கூட பொய் பேசியது கிடையாது. தஹஜ்ஜுத் தொழுகையை ஒருபோதும் தொழமல் இருந்தது கிடையாது. எப்போதும் பள்ளிவாசலுக்கு சென்றே ஜமாஅத்தான தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள்.

அவர்களது இரண்டாவது மனைவி கூறுகின்றார்கள்: அன்னார் என்னிடமும் குழந்தைகளிடமும் ரப்வா செல்வதற்கு முன்பாக இவ்வாறு கூறினார்கள்: அதாவது எனது இந்த குடும்பமும், எனது வீட்டைச் சார்ந்தவர்களும் மேலும் எனது வாரிசு கிலாஃபத் ஆகும். எனது வாழ்க்கையும் மரணமும் ஜமாஅத்திற்காகவே ஆகும் என்று கூறினார்கள்.

அஹ்மது நூர் சாஹிப் முபல்லிக் எழுதுகின்றார்கள்: அவர்கள் செய்த ஓர் அறிவுரை எப்போதும் எனக்கு நினைவில் இருக்கின்றது. அது என்னவென்றால், உங்களது முகத்தை அல்லாஹ்விடமிருந்து ஒருபோதும் திருப்பி விடாதீர்கள். அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள். அவன் தனது அடியானின் வேண்டுதலை ஒருபோதும் நிராகரிப்பதில்லை என்று கூறிவார்கள்.

முபல்லிக் ஹாஷிம் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஒருமுறை அன்னார் எங்களிடம், ஜமாஅத்தின் உண்மைத்துவத்திற்கான மிகப்பெரிய ஆதாரம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் ஆதாரங்களின் அடிப்படையில் அதற்கு பதில் கூறினோம். அதற்கு அவர்கள், ஒவ்வொரு அஹ்மதியும் தம்மைத்தாமே உண்மைத்துவத்திற்கான ஆதாரமாக கருத வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே ஜமாஅத்தின் உண்மைக்கு ஓர் ஆதாரமாக எடுத்துக்கூறும் அளவிற்கு உங்களையே தகுதியானவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

குத்பாக்களை மிகவும் கவனமாக கேட்பார்கள். எனது குத்பாவிலிருந்து குறிப்பு எடுத்து மாணவர்களிடம் கலந்துரையாடுவார்கள். மேலும் அவர்கள் குறிப்பு எடுத்தார்களாக என்பதை உறுதி செய்து கொள்வார்கள். காலத்தின் கலீஃபாவின் தூதுச் செய்தியை அனைவரும் புரிந்தார்களா? இல்லையா? என்பதை எப்போதும் கண்காணித்து வந்தார்கள். கிலாஃபத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதற்கு எப்போதும் அறிவுரை கூறி வந்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாரது உடல் 23 நவம்பர் அன்று பாகிஸ்தானிலிருந்து இந்தோனேஷியா கொண்டு வரப்பட்டது. 24 நவம்பர் அன்று தலைமையகமான பாரூனில் வஸிய்யத் செய்தவர்களுக்கான கபருஸ்தானில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

அல்லாஹ் மர்ஹூமின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் ஜன்னத்துல் ஃபிர்தர்வ்ஸில் உயர்ந்த இடத்தை வழங்குவானாக. அவர்களது குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் அல்லாஹ் பொறுமையை வழங்குவானாக. மேலும் அவர்களது சந்ததிகளுக்கும் அவர்களது அடிச்சுவட்டில் நடப்பதற்குரிய நற்பாக்கியத்தை வழங்குவானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் அ.கலீல் அஹ்மது**